| | | |
|---|---|---|
| சாட்சி : PW 1<br>கருணாநிதி | அ.வ.எண். 356/2022 | 05.03.2024 |

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

18) தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணம் 2 ஏக்கர் 53 செண்ட் என்றால் சரிதான். மேற்படி சொத்து 4 அயிட்டங்களாக உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தில் நான் குத்தகைதாரராக என்னுடைய உடல்உழைப்பினை வியர்வினை இரத்ததினை சிந்தி நிலத்தில் பாடுபட்டு பிரதிவாதிக்கு குத்தகை செலுத்தி வருவதாக வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தை பொறுத்து நான் குத்தகைதாரர் இல்லை என்றாலும், அதன் காரணமாக குத்தகைதாரருக்கு குத்தகைதாரர் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் கிடைக்கக்கூடிய பலன்கள் எதுவும் கிடைக்கத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல. வழக்கு நிலைக்கத்தக்கததல்ல என்றாலும் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ஆவணத்தில் வருவாய் நீதிமன்றத்தின் உத்தரவின் படி ஒரு பகுதியாகத்தான் குத்தகை தொகை செலுத்தியுள்ளேன் என்றால் சரிதான். பசலி 1431 வரை திருகோவிலுக்கு தாவா சொத்தை பொறுத்து மூன்று இலட்சத்து பதினேழயிரத்து தொள்ளாயிரத்து இருபத்து ஒன்பது ரூபாய் குத்தகை செலுத்தாமல் நிலுவையில் வைத்துள்ளேன் என்றாலும் அதனை கேட்டு தான் வா.சா.ஆ.2 அறிவிப்பு எனக்கு கொடுக்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். பசலி 1431 வரை தாவா சொத்திற்கு மூன்று இலட்சத்து பதினேழயிரத்து தொள்ளாயிரத்து இருபத்து ஒன்பது ரூபாய் குத்தகை பாக்கி நான் செலுத்த கடமைப்பட்டவன் என்றால் சரிதான், நான் ஒருபோகத்திற்கு கட்ட தயாராக இருக்கிறேன்.

பசலி 1431 க்கு பிறகும், வா.சா.ஆ.2 அறிவிப்பிற்கு பிறகும் இன்றைய தேதி வரை நான் குத்தகை தொலை எதுவும் செலுத்தவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வழக்கு நிலைக்கத்ததக்கதல்ல என்றாலும், தவறான காரணங்களை கூறி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. தாவா சொத்தில் இருந்து என்னை திருகோவிலில் இருந்து காலி செய்ய நடவடிக்கை எடுத்தபோது நான் ரூ.36390/–செலுத்த ஒப்புக்கொண்டதன் அடிப்படையில் வா.சா.ஆ.3 ஏற்பட்டது என்றால் சரிதான். வருவாய் நீதிமன்றத்தில் திருக்கோவில் தாவா சொத்தில் இருந்து என்னை காலி செய்யவேண்டும் என்று வா.சா.ஆ.4 அறிவிப்பு அனுப்பபட்டது என்றால் சரிதான். வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.